பெயர்: ........................... தேதி: ...........................

# கர்வம் கொண்ட முயல்

ஒரு காட்டில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தில் குட்டி முயல் ஒன்று வசித்து வந்தது. குட்டி முயலுக்கு நீண்ட நாளாக ஒரு ஆசை, என்றாவது ஒருநாள் தந்திரமுள்ள நரியைத் தன் அறிவினால் வெல்ல வேண்டும் என்று. இதனை எல்லோரிடமும் சொல்லித் தன் அறிவுக்கூர்மையை நிருபிப்பேன் என்று சவால் விடும். பிறர் கூறும் அறிவுரையை ஏளனம் செய்யும். இப்படியாக சில நாள் சென்று கொண்டிருந்தது.

ஒருநாள் நரியின் ஊளைச்சத்தத்தைக் கேட்டது. உடனே சத்தம் கேட்ட திசை நோக்கி ஓடியது. அங்கு நரி ஒன்று பள்ளத்திலிருந்து வெளியே வர முடியாமல் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. என்ன! நரியாரே உன் தந்திரம் பலிக்கவில்லையா? என்று ஏளனமாகக் கேட்டது. மேலும் நரியின் நிலைமையைக் கண்டு முயல் சிரித்தது. நரி கோபத்தை அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தது, நரி ஒரு திட்டம் தீட்டிக் கொண்டது. அதன்படி தரையில் காதை வைத்து எதையோ கேட்பது போல் பாசாங்கு செய்தது. என்ன கேட்கிறாய்? என்று முயல் கேட்டது. ம்ம்... இங்கே கடவுளின் குரல் கேட்கிறது, கடவுள் பேசுகிறாரா? ஆமாம் இந்த உலகத்திலே ஒரு முயல் தான் அறிவாளியாம்! எந்த முயல்? அதைத்தான் சரியாகக் கேட்க முடியவில்லை. உன் அருகில் உள்ள கம்பை குழிக்குள் இறக்கு. நான் பள்ளத்தைப் பெரியதாக்கிக் கேட்கிறேன் என்றது. முயல் கம்பை கீழே இறக்கியது. நரி ஒரே தாவலில் கம்பின் வழியாக பள்ளத்திலிருந்து வெளியே வந்தது. முயல் ஓடுவதற்குள் நரி முயலைப் பிடித்துக் கொன்றது.

பெயர்: .......................... தேதி: ..........................

# பயிற்சிகள்

## 1. வினாக்களுக்கேற்ற விடையளிக்கவும்.

1. முயலின் ஆசையைக் கூறு?

2.'தந்திரம் பலிக்கவில்லையா' யார் யாரைப் பார்த்துக் கேட்டது?

3. பள்ளத்தில் யாருடைய குரலை நரி கேட்டதாகக் கூறியது?

4. நரி கூறிய 'உலகத்திலே சிறந்த அறிவாளி விலங்கு' எது?

5. பள்ளத்தைப் பெரியதாக்க நரி கேட்டது எது?

## II கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

1. ஆலமரத்தில் ___________ ஒன்று வசித்து வந்தது.

2. நரியின் நிலைமையைக் கண்டு முயல் ___________

## III சேர்த்து எழுது.

1. பள்ளத்தில் + இருந்து =

2. தந்திரம் + உள்ள =

## Iv திறன் அறிதல்:

நீங்கள் முயலாக இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?